வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசூ] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞூ புரட்டாதிமீ கஅ-உ வெள்ளிக்கிழமை (4-10-1974) [இல: உச

ஈழவள நாட்டின் பேரெழுச்சிக்காக

# நற்பணி புரிந்த நம் நாதன்


## வள்ளல் இராமநாதனின் மதிவளமும் நிதிவளமும்

### பல்கலைக்கழகவளாகமாக பரந்து பயந்த பேறு

### கதிரவன் நாவிலே கவின் பெற விளங்க வைக்கும் பெரு விழா

## சந்தர்ப்பத்தை பயன்படுத்துவோம்

பிரதமர் யாழ் விஜயத்தில் தமிழ்மக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது விவேகமான செயலல்ல. எல்லா நாகரிகமான நாடுகளிலும் ஏற்கப்படும் உரிமையின்படி, ஒவ்வொரு தமிழ் தலைவருக்கும் மற்றும்



பொது மக்களுக்கும், இலங்கைக்கு வெளியேயும் இலங்கையின் சகல பகுதிகளுள்ளும் நடமாட உரிமையிருக்க வேண்டும். இதே போல் ஒவ்வொரு சிங்களத் தலைவருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இலங்கைக்கு வெளியேயும் இலங்கையின் சகல பகுதிகளுள்ளும் நடமாட உரிமை இருக்க வேண்டும். இந்த நிலையை எல்லோரும் ஏற்று ஒழுக வேண்டும்; இவ்வேளையில் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் எடுப்பதைவிட, வளாகத்தை மேலும் விஸ்தரித்து கூடிய பாடத்திட்டங்களைச் சேர்பிக்க முயற்சி செய்வது சாலச் சிறந்ததாகும்.

சந்தர்ப்பத்தைப் பாவித்து எமது குறைகளைத் தீர்க்க நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் முயலவேண்டும். சைவ ஆலயங்களில் பிரச்சினை கிளப்பும் வண்ணம் எது வித ஆர்ப்பாட்டமும் செய்தால் அஃது அச்சமயத்தின் புனிதத்திற்கு இழுக்காக அமையுமன்றோ? நாட்டிற்கும், தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு செய்து, அகில இலங்கைத் தலைவராக அனைவராலும் ஏற்கப்பட்ட ஸேர். பொன். இராமநாதன் அவர்களால் கட்டப்பட்ட பரமேஸ்வரக் கல்லூரியில் வளாகம் நிறுவப்படும் போதும், அவரது சிலையை திறக்கும்போதும்; மக்களைக் கலந்து கொள்ளாமல் தடுத்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்துவது ஸேர். பொன்னம்பலம் இராமநாதனின் நினைவிற்கே நாம் செய்யும் துரோகமாகக் கருதப்பட வேண்டும். பிரதமரின் யாழ் வருகையைத் தகுந்தமுறையில் பிரயோசனப் படுத்தி குறிப்பாக அரசாங்கத்தை ஆதரித்து வரும் கட்சிப் பிரமுகர்கள் நேரடியாகத் தமிழ்மக்களின் குறைபாடுகளை உண்மையாக எடுத்துக் காட்டி இலங்கையில் என்றும் அவர்களுக்கு

வளர்ச்சி 4-ஆம் பக்கம்



பொன்னுள பொதுப்பணி மன்னன் வள்ளல். இராமநாதன்

### முதல் அமைச்சர் முக்கிய கவனத்துக்கு

1. காங்கேசன்துறை இடைத் தேர்தல் நாளை நியமித்தல்.
2. தமிழ் மொழிக்கு உரிய அரச உரிமையை அரசமைப்பில் அமைத்தல்.
3. பல்கலைக் கழகம் புகத்தகுதியுடையவர் யாவருக்கும் வளாகங்களில் இடங்கொடுத்தல்.
4. தடுப்புக் காவலில் இருப்பவர்களை நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தல்.
5. படித்துப் பட்டம்பெற்றவர்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்பு அளித்தல்.

நாவலர் சொத்துக்கள்

## தமிழ்சைவ வளர்ச்சிக்கு உதவுதல் வேண்டும்

"தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் அரும்பாடுபட்டுழைத்தவர் நாவலர். நாவலர் தேடிய சொத்துக்கள் தமிழ் சைவ வளர்ச்சிக்காக உதவவேண்டும் அவர் காட்டியவழியில் தர்மச் சொத்துக்கள் உபயோகிக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்"

இவ்வாறு திரு. த. சோமசுந்தரம் 30-9-74-இல் யாழ். ரஸிக ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் தர்ம பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தமது தலைமையுரையிற் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்:—

தமிழுக்கும் சமயத்துக்கும் இருள் சூழ்ந்திருந்த காலத்தில் நாவலர் தனித்து நின்று சமூகத் தொண்டாற்றியமையை நாம் ஒருபோதும் மறக்க முடியாது.

தமிழ் சமய வளர்ச்சிக்காக மாத்திரமன்றி பொதுப் பணிகளிலும் ஈடுபட்டுழைத்தவர் நாவலர். தர்மச்சொத்துக்களைத் தர்ம நெறி தவறாது உபயோகிக்க வேண்டுமெனக் காட்டி வைத்தவர். தர்மச் சொத்துக்களை சிவ சொத்து என மதிக்கவேண்டும். வீண் வழியில் செலவு செய்யாது தடுத்தும் வந்தார் எனவும் கூறினர்.

நல்லூர் நாவலர் தர்மக் காணியில் வேதாகமப் பாடசாலை நடத்துவதற்குரிய கட்டிடத்தைக் கட்ட நாவலர் சபையைக் கேட்டுக்கொள்வதென்ற தீர்மானமும்,

அரசினர் சுவீகரித்த காணியில் நாவலர் ஞாபகார்த்தக் கட்டிடத்துக்கு 1972-ஆம் ஆண்டில் அத்திபாரக் கல் நாட்டியும் இன்னும் கட்டிடம் கட்டப்படவில்லை, அதனைக்கூடிய விரைவில் நிறைவேற்றுமாறு கலாச்சார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

முற் போக்கு

## எழுத்தாளர் மாநாடு

### பண்டாரநாயக்க மண்டபத்தில் அக். 26, 27 - இல் நடைபெறும்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கூட்டும் தேசிய ஒருமைப்பாட்டிற்கான எழுத்தாளர் மாநாடு இத் திங்கள் 26ம், 27ம், திகதிகளில் கொழும்பு பண்டாரநாயாக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

தேசிய ஐக்கியத்தை உருவாக்கும் மகோன்னதமான தேசிய பணியை நிறைவெற்றும் உயர் நோக்கத்துடன் கூட்டப்படவிருக்கும் இம் மாநாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்கள்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

சைவ சமயத்தவரின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் திருநாட்டின் நல்லைத் தவமணி

— சைவசித்தாந்த நல்லறிஞர் திரு. சிவ. ஆறுமுகசாமி —

ஈழத் திருநாட்டில் செந்தமிழ்ச் சைவ சான்றோர்களை ஈன்றெடுத்த முதற்பெருமை நல்லூருக்கு மட்டுமே உரிய தொன்றாகும். நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தே எல்லாம் மறப்பேனடி கிளியே ஏதும் அறியேனடி" என்ற பாடலுக்கு அணி செய்கின்ற பெருமையைக் கொண்டதும் நல்லூர் தான். இப்படியான பெருமைமிக்க நல்லூரிலே தான் தமிழர்களின் கடைசி மன்னன் வீரத்தமிழன் சங்கிலியன் அரசோச்சி மறைந்தான்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க நல்லையம்பதிதான் பொருத்தமான இடம் என்று எண்ணிப்போலும் இறைவன் காலத்துக்குக் காலம் நமக்காக நல்லூரிலே அரும்பெரும் சைவச் சான்றோர்களை அவதரிக்கச் செய்தார். சைவத்தையும் தமிழையும் உயிரும் உடலும் எனக்கொண்டு தம் வாழ்க்கையை எமக்காக அர்ப்பணித்த நாவலர் பெருமானுக்குப் பிறகு அவரின் சீரியபணியைத் தலைமேற்கொண்டு இன்று நம் மத்தியிலே அரும் பெரும் சைவத்தொண்டு ஆற்றி அளப்பரிய சேவை செய்து வருபவர் தான் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரியசுவாமிகளாகும். நாவலரின் மனக்குறையைதீர்த்து வைத்தபெருமை இவரையே சாரும். ஈழத்தில் மட்டுமன்றி கடல்கடந்து தமிழர் வாழ்கின்ற இடங்களிலெல்லாம் சைவத்தையும் தமிழையும் நிலைநாட்டிய பெருமையும் இவரையே சார்ந்ததாகும். நல்ல செயல்களில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவருக்கும் பல இடையூறுகள் வருவது இயற்கை. நால்வர் பெருமக்களுக்கே பல சோதனைகள் ஏற்பட்டதென்றால் சாதாரண மனிதர் எம்மாத்திரம்.

உயிருடன் ஒருவர் இருக்கும்போது தான் அவரின் செயற்திறனை வியந்து பாராட்டுவது சாலப்பொருத்தமானது. உயிருடன் இருக்கும்போது அவர்களின் செயல்களையும் நல்ல அரிய கருத்துக்களையும் பொருட்படுத்தாமல் அலட்சியம்செய்துவிட்டு உயர்ந்த வாழ்க்கையின் குறிக்கோளை குழிதோண்டி புதைத்துவிட்டு அவர்கள் இவ்வுலகைவிட்டு மறைந்த பிறகு விழா எடுத்தாலென்ன, சிலை எடுத்தாலென்ன. ஒருவித பயனும் கிடைக்கப்போவது இல்லை. ஒவ்வொருவரும் தங்கள் மனத்தில் அப்பெரியார்களின் அரிய கருத்துக்களை நிலை நிறுத்தி செயற்படுவார்களேயானால் அதுவே நாம் அவர்கட்கு செய்த பெருந்தொண்டாகும்.

நாவன்மையினால் இந்த உலகத்தையே ஆட்டிப்படைக்கலாம். சுவாமியவர்களும் தன் நாவன்மையினால் இரும்பைக் காந்தம் கவருவதுபோல நம்மையெல்லாம் உள்ளம் பண்படும்படியாக உலகத்தில் இருந்து ஈடேறுவதற்கான வழிவகைகளைக் காட்டி செயலாற்றி வருகின்றார், நாற்பது வருடங்களுக்கு மேலாக சைவத்தொண்டாற்றி வருகின்ற ஒரு சைவப்பெரியார் நம் மத்தியில் இருக்கின்றார் என்றால் அவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் என்று தான் கூற வேண்டும். நாவலர் சமயப்பணி தொடங்கிய வண்ணார்பண்ணை சிவன்கோவிலிலே தம் சைவப் பணியை ஆரம்பித்தா. அப்போது அவருக்கு வயது பதினெட்டு. இன்று அச் சமயப்பணி தொடங்கி 40 வருடங்கள் கடந்துவிட்டன என்றால அது நாம் செய்த தவப்பேறு என்றே கூற வேண்டும்.

இயல், இசை, நாடகத்தில் கைவந்தவராகிய சுவாமி அவர்கள் சித்திரம் வரைவதிலும் கைவந்தவர். கேட்டல், சிந்தித்தல், தெளிதல் இம்மூன்றும் அவரிடம் இயற்கையாகவே அமைந்துள்ளன. மக்களுடன் பழகி அவர்களின் குணங்களை அறிந்து இடம், பொருள், ஏவல் என்ற மூன்றையும் மேற் கொண்டு கதாப்பிரசங்கம் செய்வதில் வல்லவர். இவர் கதை செய்யும் போது மக்கள் அனைவரும் தம்மை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருப்பர்.

சுவாமியவர்கள், தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் மூன்றிலும் சமர்த்தர். சிறுபராயத்திலேயே முருகனுடைய அருளும், பல பெரியார்களின் ஆசியும் கிடைக்கப்பெற்ற தன்மையினால் இன்று ஒரு பெரும் சமயத்தின் காவலாராகத் திகழ்கின்றார். எண்ணுவார் மனதில நண்ணுவான் ஈசன் என்பதுபோல் சுவாமியவர்களின் எண்ணத்தை ஈடேற்றுவதற்காக புத்தூர் மழவராயர் குடும்பத்தினர் இன்று ஆதீனம் அமைந்திருக்கும் இடத்தை நன்கொடையாக அளித்துள்ளனர்.

இது ஒன்றே சுவாமி அவர்களின் பெருமைக்குச் சான்று பகரும், நாவலர் பெருமானுக்கு ஒருபெரும் மனக்குறை இருந்துவந்தது அது தான் இலங்கையில் ஒரு சைவ ஆதீனம் இல்லையென்பது. ஆனால் அவரின் எண்ணத்தை இன்று சுவாமியவர்கள் ஈடேற்றி நாவலரின் ஆசியைப் பெற்றுக்கொண்டார்கள். வித்வசிரோமணியின் பேரனாகிய சுவாமியவர்கள் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காக தம் உடலநிலையையும பொருட்படுத்தாமல் தொடர்ந்து ஓய்வின்றி செயலாற்றி வருகின்றார். யான் பெற்ற இன்பம பெறுக இவ்வையமெல்லாம் என்ற பரந்தநோக்குடன் சைவத்தையும் தமிழையும் சுவாமியவர்கள் எமக்குக் கிடைத்தது நாம் செய்த பூர்வ புண்ணியமேயாகும். எச்சமயத்தார்க்கும் இனியவராகத் தோற்றமளிக்கும் சுவாமியவர்களுக்கு மற்றைய சமயத்தில் உள்ளவர்களும் மதிப்புக்கொடுத்து கௌரவிப்பதை நாம் காணும்போது நாவலரின் தோற்றமே எம் கண் முன்னே தோன்றுகின்றது.

நல்லூர்க் கந்தனின் சூழலிலே அமைந்திருக்கும் ஆதீனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டு வருகின்றது. இந்த ஆதீனத்திலே இசையரங்கு, கவியரங்கு மட்டுமன்றி பெரும் விழாக்களும் நடந்துகொண்டே வருகின்றன. இதன் பெருமை ஈழத்துக்கே ஒரு சிகரமாக அமைந்த தென்றால் வியப்பேது

நாளும் நற்றமிழால், நல்லிசையால சிவபெருமான் புகழைப் பாடிய திருஞானசம்பந்த சுவாமிகளது பெயர்கொண்ட ஆதீனமும் மேன்மையுற்று விளங்குவதை நாம் கண்ணாரக் காண்கின்றோம். நாஸ்திகம் பேசி நாத்தழும் பேறுகின்ற இந்தக் காலத்திலே இசை மழை பொழிந்து பிரசங்கத்தின் மூலம் எம்மை ஈடேற்றுகின்ற சுவாமியவர்கள் பல்லாண்டுகாலம் நோயற்ற வாழ்வு வாழ்ந்து எமது சைவத்தையும தமிழையும் காக்கவேண்டுமென்று இறைவனை வேண்டுதல்செய்வோமாக.

# பண்டித பாலபண்டித வகுப்பு

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் பிரதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பண்டித, பாலபண்டித வகுப்புக்கள் எத்தகைய கட்டணமுமின்றி நடாத்தப் பட்டுவருகின்றன. அனுபவமும் முதிர்ச்சியுமுள்ள தமிழ் அறிஞர்கள் இவ்வகுப்புக்களை நடாத்தி வருகின்றார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் நோக்கங்களுக்கு அமைய இவ் வகுப்புக்கள் நடைபெற்றுவருகின்றன.

அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களின் வசதிக்கு அமைய இவ் வகுப்புக்கள் ஒழுங்குசெய்யப் பட்டுள்ளதுடன் தமிழ் ஆர்வம் மிக்க பொதுமக்களும் இவ் வகுப்புக்களில் கலந்துகொள்ளலாம் என்று இவ்வகுப்புகளுக்கு பொறுப்பாக உள்ளவர்கள் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்கள்.

# நீர் வளம் பெருக நாம் வாழ்வோம்

"நீர்இன்று அமையாது
உலகெனின் யார் யார்க்கும்
வான்இன்று அமையாது
ஒழுக்கு"

நீர் இருந்தாலே உலகில் நற்செயல்கள் நடைபெறும் என்றும் நீர இல்லாவிட்டால் அடாத செயல்கள் அதிகரிக்கும் என்பதுமே இதன் கருத்தாகும்.

நாம் உயிர் வாழ தூய காற்று, நன்னீர், உணவு, உறையுள் இன்றியமையாதன.

வளி மண்டலத்தை அசுத்தம் செய்யத்தக்க நச்சுக் காற்றை வெளிவிடும் தொழிற்சாலைகள் பெருமளவில் இல்லாத காரணத்தால் தூய காற்றைப் பெறுவது பெரியதொரு பிரச்சனையாயில்லை. அது எமக்குப் பெருமளவில் கிடைக்கிறது. இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ள நன்னீரைப் பெறுவது பெருகிவரும் மக்கட் தொகையினாலும், அத்தொகையினருக்கு ஏற்படும் பசிப் பிணியைப் போக்கும் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியதனாலும் ஒரு முக்கிய பணியாகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டை எடுத்துக் கொண்டால் - நாம் நன்னீரைப் பெறவுள்ள ஓரேசாதனம் வானம் பொழியும் மழைதான். ஆண்டில் இருமாதம் மட்டும் பெய்து தள்ளிவிடுகின்ற மழை நீரைக்கொண்டு தான் மிகுதி பத்து மாதத்தைச் சமாளிக்க வேண்டும். பத்து மாதமும் நிறைவுடன் வாழ இரு மாதமும் பெய்கின்ற மழை நீரை நம் முன்னோர் எவ்விதம் பேணி வந்தனர் என்பதை ஆராய்வதற்கு முற்பட்டால் பலவற்றை அறியலாம். அறிந்து செயல் படுத்தலாம்.

இரண்டுமாத மழை நீரும் பூமியின் மேலுள்ள பதிவுகளில் தேங்கி உள் ஊடுருவி நிலத்தின் அடியை அடைகிறது. இப் பதிவுகள் தானாக ஏற்பட்டவையும், நம்முன்னோர் ஏற்படுத்தியவையும் ஆகும். நாம் ஏற்படுத்திய பதிவுகளைக் குளங்களென்கின்றோம். குளங்களை ஆண்டுக்கு ஆண்டு கழிவு நீக்கித் தூய்மைப் படுத்தி வைக்கும் பணியை ஒழுங்காகச் செய்து வந்தனர் எம் முன்னோர், இப் பதிவுகள் வழியாக ஊடுருவும் நன்னீர் — மழை நீரைக் கிண்டிய கிணறுகள் வழியாக எமது தேவைக்குப் பயன்படுத்தும் வழக்கத்தை அன்றுமுதல் இன்றுவரை கையாண்டு வருகிறோம். வருங் காலத்திலும் இதனை அன்றி வேறு வழியை நாம் கைக்கொள்வது சாத்தியமல்ல. குளங்களை மட்டும் நம்பியிராமல் பனங் காணிகளிலும் வரம்புகளைக் கட்டி மழை நீரைத் தேக்கி வைத்தோம். உயர்த்தப்பட்ட வரப்புகளினுள்ளும் குளங்களிலும் தேங்கிய மழை நீர் நிலத்திற்குள் கசிந்து ஊடுருவி நிலநீர் வளத்தை வருடா வருடம் பெருக்கிய வண்ணம் அல்லது சேமிப்பைப் புதுப்பித்தவண்ணம் இருக்கக் கண்டோம். இந்தமுறையைக் கையாண்டு நீர்வளத்தை மட்டும் பெருக்குவதோடு நிற்காமல் நுழைந்து கெடுக்கத் துடிக்கும் கடல்நீரைத் தடுத்து நிறுத்தும் வல்லமையும் நிலநீர்க்கு ஊட்டப்பட்டது.

(வளரும்)

## இலவசம்

விஜயதசமியை முன்னிட்டு வித்தியாரம்பம் செய்யும் பாடசாலைகள், சிறுவர் கல்வி நிலையங்கள் தகுந்த அத்தாட்சிப்பத்திரம் கொடுத்து சரஸ்வதிபடம், தேவி தோத்திரப்பாடல் புத்தகம், பனை ஓலை ஏடுகள் ஆகியவற்றை யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் தொழிலகத்தாரிடம் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

## முற்போக்கு எழுத்

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

பெருந்தொகையாகக் கலந்துகொள்ளவிருக்கின்றனர். சனாதிபதி அவர்களாலும், ஒரு தொழிலாளியாலும், ஒரு விவசாயியாலும் தேசிய பாரம்பரியத்திற்கு அமைய இம் மாநாடு துவக்கி வைக்கப் படும்.

இம் மாநாடுபற்றி நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் கருத்துத்தெரிவிக்கையில்:—

"இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தேசிய ஒற்றுமைக்கான மகாநாட்டில் 12 அம்சத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்கவிருக்கிறது. அது மிகச் சிறந்த திட்டமாக அமைந்திருக்கிறது. அந்தத் திட்டம ஏற்றுக்கொள்ளப்பட்டு விடுமானால், நம் நாட்டில் மொழிப் பிரச்சினைக்கும், இனப் பிரச்சினைக்கும் நியாயமானதோர் தீர்வுகாணப்பட்டுவிடும் என்பதை நம்பிக்கையுடன் கூறலாம். எனவே இந்த மாநாட்டுக்குப் பரிபூரண ஆதரவைத் தெரிவிப்பது தமிழைப் நேசிக்கும் ஒவ்வொருவரினதும் புனிதமான கடமையாகும்",

ஸேர். பொன். இராமநாத வள்ளலுக்கு

## நினைவு முத்திரை?



பக்தர்: "எங்கள் மாபெரும் வள்ளல் — தவ நெறிச் செல்வர் — சேர். பொன். இராமநாதன்துரை அவர்களது நினைவு முத்திரையொன்று இதுவரையில்லாதது ஒருகுறை என்று பலரும் பேசுகிறார்கள்; அப்படி நினைவு முத்திரையை வெளியிடுங்களென்று கேட்க, பொருத்தமான நேரம் இது வெனநினைக்கிறேன் அம்மான்?

சித்தர்: "ஆங்காலம் ஆகும்" என்பார்கள்; கேட்டிருந்தால் நிச்சயம் இக்காலம் ஆகியிருக்கும் என்கிறார்கள்பாருங்கோ!

"நாயன்மார் — நாதன்"

# பனையைப் பயிரிடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சைவபரிபாலன சபையின் 13ம், 14ம், 15ம் வருட ஆவேதனம்.

## சைவ பரிபாலன சபையின் விதானங்கள்

( முன் வளர்ச்சி — 6 )

11. சபைக் கூட்டங்கள்: (1) மகா சபையார் அதிகாரசபையார் கேட்கும் வேளைகளிலும் தங்களுட் பத்துப் பேருக்குக் குறையாத தொகையினர் அவசியமென்று கண்டு அழைப்பிக்கும் வேளைகளிலும் கூடுவார்கள். மகாசபை நடத்துவதற்கு அவருட் பதினுலுபேருக்குக் குறையாத தொகையினர் கூடுதல்வேண்டும்.

(2) அதிகார சபையார், நிருவாக சபையார் கேட்கும் வேளைகளிலும் தங்களுள் ஐந்துபேருக்குக் குறையாத தொகையினர் அழைப்பிக்கும் வேளைகளிலும் கூடுவார்கள். அதிகார சபை நடத்துவதற்கு அவருட் பதினொரு பேருக்குக் குறையாத தொகையினர் கூடுதல்வேண்டும்.

(3) நிருவாகசபையார் அவசியமென்று அழைக்கும் வேளைகளிலெல்லாம் கூடுவார்கள். நிருவாகசபை நடத்துவதற்கு அவருள் ஐந்துபேருக்குக் குறையாத தொகையினர் கூடுதல் வேண்டும்.

12. வருடாந்த மகாசபைக் கூட்டம்: (1) ஒவ்வொரு வருடத்திலும் சித்திரை மீ 15-ம் திகதிக்கு மேற்படாமல் மகாசபையாரின் வருடாந்தக் கூட்டம் கூடுதல் வேண்டும் அக் கூட்டத்தில், பரிசோதகராற் பார்வையிடப்பட்ட சபையின் கணக்கு, ஆவேதனம் முதலியவைகளைப் பரீக்ஷித்துச் சபையார் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பார்கள்.

(2) மேலே சொல்லப்பட்ட நான்காம், ஐந்தாம் விதானங்களிற் சொல்லப்பட்ட சபையுத்தியோகஸ்தர், அதிகார சபை அங்கத்தவர்களெல்லாம் இவ் வருடாந்தக் கூட்டத்திலேயே தெரிவு செய்யப்படுவார்கள். இவ்வுத்தியோகஸ்தருள். அல்லது அதிகார சபையாருள், யாராயினும் இறந்துவிட்டால் அல்லது விலகிக்கொண்டால் அதிகார சபையின் மற்றைய அங்கத்தவர் மகாசபையாருள் ஒருவரை இவருடைய இடத்திற்குத் தெரிவு செய்துகொள்ளலாம். இங்ஙனம் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர் அடுத்துவரும் வருடாந்த மகாசபை கூடும்வரையும் உத்தியோகத்திலிருக்க உரிமையுடையவராவர்.

13. இச்சபையின் அங்கத்தவர்களெல்லாரும் பின்னுற் காண்கிற விதிதப்படி கையொப்பப் பணம் கொடுத்தல் வேண்டும்.

(1) அதிகார சபையிலும் நிருவாக சபையிலும் உள்ள அங்கத்தவர் ஒவ்வொருவரும் வருஷந்தோறும் பன்னிரண்டு ரூபாவுக்குக் குறையாத தொகை முற்பணமாக அல்லது கொடுக்க வேண்டிய பணத்தை பன்னிரண்டு கூறுக்கி ஒவ்வொரு கூற்றை மாசத்துக்கு ஒருதரம் முன்னேறக் கொடுத்தல்வேண்டும்.

(2) மகா சபையிலுள்ள அங்கத்தவர் ஒவ்வொருவரும் வருஷத்தோறும் இரண்டு ரூபாவுக்குக் குறையாத தொகை முற்பணமாக அல்லது கொடுக்கவேண்டிய பணத்தை நாலுகூறுக்கி ஒவ்வொரு கூற்றை மூன்று மாசத்துக்கொருதரம் முன்னேறக் கொடுத்தல் வேண்டும். இன்னும் ஒரே தடவையில் ரூபா 25 கொடுக்கும் ஒவ்வொரு சைவசமயியும் இச்சபைக்குச் சீவபரியந்தம் அங்கத்தவராயிருக்கலாம். இவர் வேறு கையொப்பப்பணம் கொடுக்க வேண்டியதில்லை.

---

பழைய விதானங்கள்

14. சைவ பரிபாலனசபையின் பழைய விதானங்கள் எல்லாம் இவ்விதானங்களால் அழிக்கப்படுகின்றன.

இவ்வாவேதனமும், சபைக் கணக்குகளும், சபை விதானங்களும் சென்ற ஜூலை மீ 11 உ கூடிய வருடாந்த மகாசபையில் வாசிக்கப்பட்டு சபையாரது அங்கீகாரம் பெற்றன.

[illegible]03 ஆம் ஆண்டு — வி. காசிப்பிள்ளை
[illegible]ஸ்ட் மீ 15உ — சை. ப. சபை இலேககர்

---

உ
சிவமயம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

அன்புடையீர்!

சைவ பரிபாலன சபையின் 86 வது வருடாந்தப் பொதுக் கூட்டம் ஒக்ரோபர் மாதம் 27-ஆம் தேதி ( 27-10-74 ) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என்பதைச் சபையின் உறுப்பினர்கட்கு அறியத் தருகின்றோம்.

உறுப்பினர் சந்தா பாக்கி (31-3-74 வரை) உள்ள உறுப்பினர்கள் தங்களது பாக்கிகளையெல்லாம் 21-10-74 திங்கட்கிழமைக்கு முன்னர் செலுத்தி ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வை. இரகுநாதமுதலியார்
கௌரவ காரியதரிசி,
சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 23-9-74

( விலாச மாற்றம் அல்லது அங்கத்தவர் இல்லாது இருப்பின் காரியதரிசிக்கு அறிவிக்கவும்.)

## வவுனியாவில் பனை மகோற்சவம்

சென்ற 26-9.74 புதன் கிழமை மாலை வவுனியா மகா வித்தியாலய மண்டபத்தில் அரசாங்க அதிபர் திரு. சிவஞானம் தலைமையில் பனை மகோற்சவ விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. சர்வோதய சகோதரிகளும், தியாகி. இராஜகோபால், விவசாயப்பகுதி திருகாராள சிங்கம் முதலான பெரியார்களும் விழாவிற் பங்குபற்றினர்கள்,

யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக உரிமையாளர் திரு. க. கனகராசா சமாதான நீதவான்; அவர்களது முயற்சியால் நடைபெற்ற விழாவில் பனையின் பிரயோசனம், பொருளாதாரம் முதலியன சம்பந்தமாகப் பெரியோர்கள் பேசினர்கள். திரு. கனகராசா அவர்கள் மரம் நாட்டுவிழா, நீர்வளத்தைப் பாதுகாத்தல், பனைமர சோபனம், தாலவிலாசம், பூதானம் முதலிய நூல்களை விழாவில் வந்திருந்தவர்களுக்கு இலவசமாகக்கொடுத்துப் பனைமரத்தை ஏராளமாகப் பயிர் செய்து பயனடையுமாறு வேண்டினர்.

பனையின் பிரயோசம் பற்றித் திரு. சு. பரநிருபசிங்கம் அவர்கள் விரிவுரையாற்றினர்கள். திருப்பூங்குடி திரு. ஆறுமுகம் அவர்கள "தாலவிலாசம்" பற்றிச் சிறப்பாக வில்லிசை விருந்தளித்தனர்.

---

## மாங்குளத்தில் மரம் நாட்டு விழா

விநோபாஜியின் அருளாசிபெற்ற பாத யாத்திரைச் சகோதரிகள் மாங்குளத்து மகா வித்தியாலயத்தில் ஒரு நாள் தங்கியிருந்தார்கள். அங்கே அவர்கள் 21-9-74 சனிக்கிழமை கலந்துரையாடலும், மாநாடும் நடத்தினர்கள். அன்று மாலை கலந்துரையாடலில் பங்கு பற்றிய மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக உரிமையாளர் திரு. க. கனகராசா, சகோதரிகளை மரம்நாட்டு விழாவில் ஈடுபடுத்தினர்கள்: சகோதரிகள் மரம் நாட்டுதலின் பிரயோசனத்தையும் சிறப்பையும் பற்றிக் கூறினர்கள். குடியேற்றங்களில் இப்போது குடியேறியுள்ளவர்கள் பிரதேசங்களிற் போதிய மரங்களை நாட்டினுல் அவை அவர்களின் அடுத்த தலைமுறையில் வரும் சந்ததியிருக்கு வேண்டியளவு பிரயோசனத்தைத் தரும் எனவும் கூறினர்கள்: திரு க. கனகராசா அவர்கள் நெல்லிக்கன்று முதலியவற்றையும், பனம் விதைகளையும் உபகரித்தார்கள்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஹவுஸ்ம் புறெப்பட்டி (Trades) ரேட்ஸ் லிமிட்டெட்,
இல: 122, டி. எஸ். சேனநாயக்கா வீதி,
பொரளை, கொழும்பு 8: —வழக்காளி
வழ, இல. M. B 12968 எதிராக
வல்லிபுரம் சிதம்பரநடராஜா:
யாழ்ப்பாணம் அம்மன் ரோட், தற்போது
P. W. D. கந்தோர், மிகிந்தலை. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12968ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆண்டு ஐப்பசி மாதம் 29ம திகதி (29-10-74) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 12,495/-ம், 10-2-72 தொடக்கம் 8-6-73 வரைக்கும் ரூபாய் 10,000க்கு 9வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 835 - 26 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "கம்பன் வயல்" நெற்பரப்பு 18, இணைறும், மரங்களும், 10-7-67 இல் உத்தரவுபெற்ற உளாந்தா T. கந்தையாவால் அளந்து தயாரிக்கப்பட்ட 3327ம் இலக்கப் படத்தில் 5ம் துண்டாக காட்டப்பட்டிருக்கும் பாகம் நெ. பரப்பு இலா. 1 குளி 13.5 ம், இந்த நெ. பரப்பு இலா. 1ம். குளி 13.5 குறிக்கும் எல்லை கிழக்கு:- விற்பனையாளருக்கு உருமையான பாதைக்காக விடப்பட்ட 15 அடி அகலம் கொண்ட நிலம், வடக்கு:- குறித்த படத்தில் 3ம் துண்டாக காட்டிய விற்பனையாளருக்கு உரிய பாகம். மேற்கு:- கந்தையா பெண் நவமணியின் ஆதனம் தெற்கு: அம்மன் ரோட்டு, இதடங்கலும். பதிவு D 357/61

அரா்லி வடக்கு, — சி. செ. பாலசிங்கம்
வட்டுக்கோட்டை, — கொமிசனரும் விலைமதிப்பாளரும்
29-9-74 — 209, 4-10

---

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதி மன்றத்தில்

வழ. இல: M B 13832

சுன்னுகத்தைச் சேர்ந்த முத்துக்குமாரு பொன்னம்பலம்
எதிராக —வாதி
சுன்னுகத்தைச் சேர்ந்த கந்தையா கனகசபை —பிரதிவாதி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் M B 13832ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆண்டு கார்த்திகைமாதம் 12-ம் திகதி (12-11-74) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதலும் வட்டியும் ரூபா 4259-16 சதம், மேலும் 1973-5-14 தொடக்கம்; 1973-10-4ம் திகதி வரையும் ரூபா 3000க்கு 10 வீத வட்டியும் அதன்பின் செலுத்தும் வரை முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 423-60 சதமுமாகும்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வட பகுதி, உடுவில் கோவிற்பற்று, உடுவில் இறை, "மினுக்கி" என அழைக்கப்படும் நெற்பரப்பு 8ம் குளி 4ம் கிணற்றுடன் உள்ளது; எல்லை கிழக்கில்:- கந்தையா கந்தசாமியின் ஆதனமும், எல்லை வடக்கில்:- அப்பா தம்பித்துரையின் ஆதனமும், எல்லை மேற்கில்:- தம்பிப்பிள்ளை தம்பித்துரையினதும் பெண் செல்லாச்சிப்பிள்ளையினதும், சிதம்பரம் அம்பலவாணர் சுவாமி கோவிலினதும், வெற்றிவேலு அபிமன்னசிங்கத்தினது ஆதனங்களும், எல்லை தெற்கில்:- சீனியப்பா நாகலிங்கத்தினதும் பங்காளரினதும் ஆதனம், இந்நெல்லைப்படி குறித்த கிணற்றில் கிழக்கெல்லைக் காணிக்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும் பிற நீங்கலாக இதனடங்கலும். பதிவு: 4, 376/37

"வடிவேல் உதயம்" — சி. ஆ. த. வடிவேலு J. P.
காங்கேசன்துறை வீதி, — கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
கோண்டாவில் — ஏலவிற்பனையாளரும்
28-9-74, — 211, 4-10

---

## பிரிவிடுதல் நொத்தீஸ்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

புலோலி மேற்கு, முத்துச்சாமி ஐயர் சிதம்பரநாதக் குருக்கள்
இல: P. 1507 எதிராக —வழக்காளி
வல்வெட்டித்துறை முத்துக்குருக்கள் மகாகணபதி ஐயர் கைம்பெண் நகுலாம்பிகை —எதிரி

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய், கோப்பாய் தெற்கு இறை காளமபிராயன நி. பர. 6 குளி 13 என்னும் ஆதனம்; என்னும் ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற்கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1973ம் ஆண்டு தை மீ 12ந் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிருர்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
(ஒப்பம்) பொ. பாக்கியநாதன்
பிரதம லிகிதர் / சக்கிடுத்தார்

1972ம் ஆண்டு
மார்கழி மீ 8ம் உ
தயாரித்தவர்:
(ஒப்பம்) க. கு. பாலசுப்பிரமணியம்
வழக்காளியின் தரணி

# பஞ்சத்தைப் போக்குவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக மூந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த இல புரட்டாதி ௧அ-உ வெள்ளிக்கிழமை [1974

## காந்திமகான் கருத்தென்ன

மாற்றுனையும் மதித்து மனிதப் பண்புடன் இறைவனை இறைஞ்சிய வண்ணம் மக்கள் பணி ஆற்றிய மகாத்மா காந்தியை, குறிப்பாக இவ்வாரம், எண்ணினேம், எங்கள் நினைவைச் சமர்ப்பித்தோம். இது வழமையான சம்பிரதாயச் செயலாய் நின்றுவிட்டால் எய்தும் பயன் யாதுமின்றிக் கபட்த்தின்பால் எழுந்த கருமமாகவே கருதப்படும். சமய குரவர்களை, சந்தானசாரியர்களை, சற்குருநாதரை இவ்வாறே குருபூசை வேளைகளில் நினைவுகூர்ந்து விடுகின்றேம். ஓர்ந்து அவர்கள் புகட்டிய புனித நெறியைப் பின்பற்றி ஒழுக ஒருசிறிதும் முயற்சிக்கின்றேமில்லை. இந்தநிலை இனி மாறுதல் வேண்டும். கலி காலம் கொடுமையானதென்ற கூற்று உண்மையென்ற வகையிலே உலகெங்கணும் உபத்திரவம் அதிகரித்துவிட்டது. நிலமை வரவர மிகமிக நெருக்கடியாகின்றது. இவ் வேளையிலாவது உண்மை உள்ளத்துடன் இறைவனை, இறை அடியார்களை, மதமும சமயமும போதித்த குரவர்களை; மனிதர்களுக்குள் மகான்களாய் வாழ்ந்தவர்களை எண்ணி அவர்கள் உணர்த்தியவற்றை நடைமுறையிற் கொண்டு நல்ல வண்ணம் நாமும் வாழ்ந்து நம்மவர்களும் வாழ நல்ல வழி தேடுவோமாக.

காந்திமகான் காட்டிய வழி ஒன்றுண்டு. உண்மை ஒழுக்க நெறி, துன்பம் ஏனையோருக்கு இழைக்காத தூய நெறி. உள்ளத்தால் உரையால் உழைப்பால் ஒருவருக்குந் தீமை செய்யாமற் பணி புரியும் பரிசுத்த நெறி. மகாத்மா வாரம் ஆம் இவ் வேளையில் இந்த உயர்ந்த மனிதப் பண்பை ஒரு குறிக்கோளாக அமைத்து எங்கள் தொண்டுகளை ஆற்றுவோம். இதுவே அம் மகானை எண்ணுவதற்கு ஏற்ற வழி.

## பால பண்டித பண்டித வகுப்புகள்

வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் (நாவலர் மகாவித்தியாலயம்) தமிழ் மொழியினதும் வட மொழியினதும் அபிவிருத்திக்காக ஷெ பாடசாலையினது தர்ம கர்த்தாச் சபையினது மேற்பார்வையில் பால பண்டித, பண்டித வகுப்புகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுகின்றன. பிரம்மஸ்ரீ இ. க. சீதாராம சாஸ்திரி அவர்கள் வடமொழி கற்பிக்கின்றனர். வித்துவான் ந. சுப்பையபிள்ளை, சரவணை, பண்டிதர் இ. பொன்னையா முதலியவர்கள் பாலபண்டித, பண்டித பரீட்சைக்குரிய தமிழ், இலக்கண இலக்கிய பாடங்களைப் படிப்பிக்கின்றார்கள். எம் மொழியையும் மரபின்படி கற்றுற்றான் அம் மொழியை ஒருவன் முறையாக எழுதவும் பேசவும் இயலும்.

தமிழ்மொழியின் அருமை அதன் இலக்கண இலக்கியங்களிற் தங்கியிருக்கின்றது. குறிக்கப்பட்ட இவ்வகுப்புக்களிற் சேர்ந்து கல்வி பயிலல் மாணவர்களுக்குப் பெருநன்மையைத் தரும். இப்பொழுது வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தொகை குறைந்து வருவதாக அறிகின்றேம். பால பண்டித, பண்டித பரீட்சைகளை விஸ்தரிக்க வேண்டிய நடைமுறைகளை அரசினரும் கையாளலாம். குறித்த பரீட்சைகளிற் சித்தியடைவோருக்கு அரசாங்கம் கூடுதலான சம்பளம் கொடுக்க ஏற்பாடுசெய்தல் நன்று. தமிழ் உறுதிகள் எழுதும் சட்டத்தரணிமாரும் இப் பரீட்சைகளிற் சித்தியடைதல் வேண்டும் என்ற நிபந்தனையுண்டுபண்ணினல் இப் பரீட்சைகளுக்கு கூடுதலான மாணவர்கள் தோற்றுவார்கள்.

தமிழ்மொழி வடமொழி அபிவிருத்தியின் பொருட்டு நடைபெறும் இவ் வகுப்புகளுக்கு தமிழ் மாணவர்கள்; அரசாங்க அலுவலகங்களிற் கடமைபுரிவோர் உட்பட யாவரும் ஆதரித்தல் வேண்டும். இவ்வரிய சந்தர்ப்பத்தை இழத்தல் பெரும் பேதமையாகும். 'கரும்பு தின்னக் கைக் கூலியா'? என்ற முதுமொழியை நினைவோமாக.

காரைக்காலம்மையார்

## காரிகையார்களில் ஓர் உத்தமி

### உரும்பிராயில் அருட்கவி உரை

"நமக்கு வரும் வினைகளைப் போக்கி அருளுகின்றார் விநாயகப்பெருமான். கருணைமழை பொழியும் உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோவிலில் தீர்த்தோற்சவமாகிய புண்ணியதினத்தில் காரைக்காலமமையார் பற்றிப் பேசியது மிகவும் பொருத்தமாகும். காரைக்காலம்மையாரின் கற்பொழுக்கம், சைவப் பண்பாட்டுநெறி சமயச சான்றோர்களினல் பாராட்டப்படுவன. காரைக்காலம்மையார் காரிகையார்களில் ஓர் உத்தமி. அவரது சரித்திரம் தெய்வீகமானது" உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோவில் தீர்த்தோற்சவ இரவு நிகழ்ச்சியில "காரைக்காலம்மையார்" என்னும் பொருள் பற்றிச் சங்கீதகதாபபிரசங்கம் செய்த அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

இவ் வைபவத்தை ஆரம்பித்துவைத்துப் பேசிய திருப்பணிச்சபைக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் "சமயச் சான்றோர்களின் சரித்திரங்களை ஆலயங்களில் உரைப்பதும் கேட்பதும் சமயவளர்ச்சியை உண்டாக்குவன. நாவலர் பெருமானது கொள்கையும் இதுவே. சைவாலயங்கள் தோறும் சைவசமய ஸ்தாபனங்கள் எல்லாவற்றிலும் சைவப் பிரசங்கங்கள் இடம் பெற வேண்டுமென்பதே நாவலர் ஐயாவின் குறிக்கோள்" என்றார்.

பிரதம குருக்கள் பிரமஸ்ரீ ச. பரமேஸ்வரக் குருக்கள் பேசுகையில்: "யான் ஆசாரிய பிஷேகம்பெற்று முதன் முதலாக எங்கள் குலதெய்வமான கருணாகரப் பிள்ளையாரின் உற்சவத்தில் கொடியேற்றிக் கிரியைகள் செய்ய வாய்ப்புக் கிடைத்ததும் கருணாகரன் திருவருளே, இந்த நிகழ்ச்சியை யான் என்றுமே மறக்க முடியாது: தனக்கு மேலே தலைவர் இல்லாத விநாயகப் பெருமானை வழிபட்டால் யாவும் சித்திக்கும்" என்றார்.

தொழிற்றிணைக்கள உதவி ஆணையாளர் திரு. செ. தனபாலசிங்கம் பேசுகையில்: "பிரமஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் ஆலயக் கிரியைகளை எவ்வாறு சிறப்புற நடாத்தினர்களோ அவரைப் போல அவரது சிரேஷ்ட புத்திரரான பிரம்மஸ்ரீ ச. பரமேஸ்வரக் குருக்கள் அவர்களும் கருணாகரப் பிள்ளையாருக்கு கொடியேற்றிச் சிறப்பித்துள்ளார். உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தைப் பரிபாலித்த குருக்கள்மார் யாவரும் கற்று வல்ல பெரியோர்களாய்த் திகழ்ந்தார்கள். அவர்கள் வழிவந்த சபாரத்தினக் குருக்கள் - பரமேஸ்வரக்குருக்கள் அ ர்களும் பலபல நாடுகளுக்கும் சென்று சைவசமயக் கி யை முறைகளை வளர்க்க எல்லாம் வல்ல கருணாகரப் பிள்ளையார் திருவருள் புரிவாராகுக" என்றார்.

தீர்த்தோற்சவ விழா இறுதியில் பிரமஸ்ரீ ச. பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள் மங்கல வாத்தியங்கள் முழங்க பல நூற்றுக்கணக்கான அடியார்கள் புடைசூழ ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு கௌரவிக்கப்பெற்றார்.

## வள்ளல்தந்த வளாகமே! வாழ்க நன்று வாழ்கவே!

"நல்லூரான் வெற்றிவேலன்" — "நாயன்மார் - நாதன்"

வாழ்க ஈழத் தமிழகம், வாழ்க இனிது வாழ்கவே
வாழ்க இராம நாதனே! வள்ளல் தந்த வளாகமே!
வாழ்க எங்கள் கலைகளும்! வளர்க கல்வி மேன்மையும்!
வாழ்க தேனின் தமிழ்மொழி! வளர்க என்றும் வாழ்கவே

தெய்வச் சால்பில் நின்றவர், தீரம் யாவும் கொண்டவர்
பொய்ம்மை சாடி அன்றவர் பொன்னைத் தேடித் தந்தவர்
மெய்ம்மை பரவ இன்றவர் நாமம் சொல்லிச் செல்பவர்
உய்மை வழியில் என்றுமே உண்மை கொண்டு உயர்வரே!

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 4—10—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெறறது.
பிரதம ஆசிரியர்: திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர்: திரு. மு. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீச்சரத்தில்

## மரம்நாட்டு விழா

கடந்த 26-9-74 வியாழக்கிழமை அப்பா தினமாகும். அன்று திருக்கேதீஸ்வரத்திலுள்ள நாவலர் மடம் விழாக் கோலம் பூண்டிருந்தது: அம் மடத்தை அறியாத யாத்திரிகர்களும் தொண்டர்களும் இல்லை எனலாம்: இந்தியாவிலிருந்து வந்த திரு. நாராயபிள்ளை என்பவர் இராமநாதவள்ளவோடு தொடர்பு கொண்டவர் அவர் நாவலர் மடத்தில் தங்கியிருந்து அன்னதானப் பணி செய்துவந்த விசேடத்தினுலே அம் மடம் அப்பா மடம் எனப் பெயர் பெறுவதாயிற்று. அப்பா அவர்கள் மறைந்த பின்னரும் அவர் புகழ் மங்கவில்லை? அன்னாரின் சிரார்த்த தினம் அங்கே வெகுவிமரிசையாக நடைபெற்றது. (வளரும்)

## சந்தர்ப்பத்தைப்பயன்

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

மானத்துடனும், சம உரிமையுடனும் சுய மரியாதையுடன் தலை நிமிர்ந்து வாழ வழிவகுக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதுவே வருங்காலத் தமிழ் மக்களுக்கும், இலங்கைவாழ் மக்களுக்கும் நாம் ஒவ்வொருவரும் செய்யக் கூடிய சிறந்த தொண்டாக அமையும்.

இராஜ இராஜேஸ்வரன்
தங்கராஜா
(சட்டத் தரணி)
தலைவர், திறனாய்வுக் கழகம்
5, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம். 3-10-74

கோட்டு விற்பனவு
விளம்பரம்
யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றம்

இல, எம். பி. 13642
பஸ்ரியாம்பிள்ளை கைம்பெண் ஜெயினம்மா, நாரந்தனை, ஊர்காவற்றுறை
வழக்காளி
எதிராக
1. பாவிலுப்பிள்ளை சிங்கராயர்
2. பெண் லூயிஸ்
நாரந்தனை, ஊர்காவற்றுறை;
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13642-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் திகதி (31-10-74) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:
ரூபா 6000/- மேலும் ரூபா 3000/-க்கு வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீதம், வழக்கு அணைத்த திகதியாகிய 5-2-73 திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 29-5-73 திகதி வரையுமான வட்டியும், அதன் பின்னர் மூழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியுமான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவுரூபா 531-26 கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று நாராந்தனை இறை வீட்டுவாசற் சீமாவும், இளவிபுலமும் நெ. பர. 13½ நறுவியா சீமா நெ. பர. 4½ ஒரே துண்டாயிருக்கின்றன. கூடிய நெ. பர. 7¾ எல்லை கிழக்கு:- யோசெப் பெண் குணரத்தினத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கு:- குட்டியார் பெண் முத்தம்மாவின் உருமைக்காரருக்குமுடைய வாதனம், மேற்கு:- சந்தியாப்பிள்ளை போலுவுக்குடைய வாதனம், தெற்கு:- மானுவேல் பெண் றஜிமாவுக்குடைய வாதனம். இதடங்கலும்.

கா. முத்துக்குமாரு ஐயர்
நீதிமன்ற ஆணையாளரும்,
விலைமதிப்பாளர்.
"சன்னிதி வேல்"
பருத்தித்துறை.
1-10-74 212-74